# இந்தியாவிலேயே அதிகம் குறிவைத்துத் தாக்கப்பட்டவர், தலைவர் கலைஞர்!

## ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ நூலுக்கு – முரசொலி செல்வம் அளித்த சிறப்புப் பேட்டி!

**‘இந்து தமிழ் திசை’ நாளிதழ் வெளியிட்ட ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ எனும் – முத்தமிழறிஞர் கலைஞருக்குப் புகழ் மாலை சூட்டும் வகையில் வெளியான அரிய நூலுக்கு முரசொலி செல்வம் அவர்கள், ஒரு சிறப்புப் பேட்டியளித்திருந்தார். எழுத்தாளர் சமஸ் அவர்கள் கண்ட அந்த சிறப்புப் பேட்டி வருமாறு:–**



**சமஸ்:** ஒருவகையில் கலைஞரின் குடும்பப் பத்திரிகை என்று ‘முரசொலி’யைச் சொல்லலாமா?

**முரசொலி செல்வம்:** குடும்பமே உழைத்த கட்சிப் பத்திரிகை என்று சொல்லலாம். தி.மு.க. தொடங்குவதற்கு முன்பு, ஒரு அரசியல் தலைவராக உருவெடுப்பதற்கெல்லாம் முன்பு கலைஞர் அவர்கள் அவருடைய 18 வயதில் தொடங்கிய பத்திரிகை இது. பெரிய நிறுவனம் எல்லாம் அல்ல ஒரு சாமானிய இளைஞனின் கனவு. அந்தச் சூழலில் யார் அவருக்கு உதவியாக இருந்திருக்க முடியும்? குடும்பமே ஓடினோம் என்றால், ஒரு பெரிய கட்டமைப்பில் நடந்த பத்திரிகை அல்ல இது – எல்லோருடைய உதவியும் தேவைப்பட்டது என்பதனால்தான். வீட்டில் யாராவது சும்மா உட்கார்ந்திருந்தாலே, ‘அங்கே போய் கொஞ்சம் வேலை பார்க்கலாமே!’ என்பார்கள். இப்படிதான் மாறன், அமிர்தம், நான், தமிழரசு, அழகிரி, ஸ்டாலின் எல்லாருமே இங்கு வந்தோம். வேலை என்றால் என்னவென்று நினைக்கிறீர்கள்? சந்தாதாரர் முகவரி பட்டியல் சரி பார்ப்பது, பார்சல் போடுவது இப்படிச் சின்னச் சின்ன வேலைகளாகத்தான் ஆரம்பிக்கும். அச்சுறுத்தல் எப்போதும் இருக்கும். சின்ன அலுவலகம். சின்ன நிர்வாகம். ஆனால், நடந்தது முக்கியமான வேலை. நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்றுதான் எல்லோரும் ஓடினோம்.



**சமஸ்:** நீங்கள் ‘முரசொலி’க்கு வந்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

**முரசொலி செல்வம்:** ஆயிற்று 50 வருஷங்கள். சட்டம் படித்தபோது இருந்த கனவுகள் வேறு. இங்கு வந்த பின் எல்லாம் மாறிப்போயிற்று. பத்திரிகை வேலையின் ருசியும் காரணம் என்று சொல்லலாம். ஐந்து முறை முதல்வராக இருந்தவரே அன்றாடம் அலுக்காமல் இரண்டு மணி நேரமாவது இங்கு வந்துவிடுவார் என்றால், சவால் தரும் ருசிதானே காரணம்!

**சமஸ்:** கலைஞருக்கு கீழ் பணியாற்றுவது சிரமம் என்பார்களே?

**முரசொலி செல்வம்:** அது உண்மைதான். அவர் மாதிரி யாராலும் கடுமையாக உழைக்க முடியாது. மொத்தம் 12 பக்கங்கள் என்றால், அந்தக் காலத்தில் 8 பக்கங்கள் வரை அவரே எழுதுவார். எல்லாம் அவருக்கு நேரத்திற்கு ஆக வேண்டும். பிழைகள் பொறுக்க மாட்டார். கோபம் வரும். தப்பு பார்த்துப் பொறுக்காமல், அலுவலகத்தையே பூட்டிவிட்டுப் போன நாட்களெல்லாம் உண்டு.

**சமஸ்:** பத்திரிகை அலுவலகத்தையே பூட்டிவிடுவாரா?

**முரசொலி செல்வம்:** ஆமாம். ‘இப்படித் தமிழைக் காயப்படுத்தி பத்திரிகை நடத்தத் தேவையில்லை’ என்று சொல்லி அலுவலகத்தைப் பூட்டி சாவியை சட்டைப்பையில் போட்டுக் கொண்டு போய்விடுவார். கஷ்டம் என்னவென்றால், சம்பந்தப்பட்ட யாரும் அவர் முன்பு அப்போது போய் நிற்க முடியாது. அப்புறம் தோதான ஆட்கள், அவருடைய வயதான நண்பர்கள் யாரையாவது அழைத்துக்கொண்டு போய் மன்றாடினால், கடுமையாக எச்சரித்துவிட்டு சாவியைத் திரும்பக் கொடுப்பார்.

**சமஸ்:** உங்களுடைய அனுபவத்தில் ‘முரசொலி’க்குக் கடுமையான நாட்கள் என்று எவற்றைச் சொல்வீர்கள்?




**முரசொலி செல்வம்:** நெருக்கடிநிலைக் காலகட்டம். தணிக்கை என்ற பெயரில் எல்லாவற்றிலும் கை வைப்பார்கள் அதிகாரிகள். அப்படியும் ரொம்பப் பூடகமாக இலக்கிய நடையில் சில விஷயங்களை உள்ளே தள்ளிவிடுவார் கலைஞர் அவர்கள். அவற்றையெல்லாம் விலாவரியாக விளக்கி ‘எப்படி இதையெல்லாம் விட்டார்கள் தணிக்கை அதிகாரிகள்?’ என்று கேட்டு ‘மக்கள் குரல்’ பத்திரிகையில் எழுதுவார்கள். விளைவாக, எழுதப்படும் எல்லாவற்றையுமே தூக்கிவிட ஆரம்பித்தார்கள் அதிகாரிகள். ஒருகட்டத்தில் வெறுத்துப்போய்தான், ‘வெண்டைக்காய் உடம்புக்கு நல்லது’, ‘விளக்கெண்ணெய் சூட்டைத் தணிக்கும்’ என்றெல்லாம் பகடிசெய்து எழுத ஆரம்பித்தார்.

**சமஸ்:** சக பத்திரிகையாளர்களே பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிராக இருந்தார்களா?

**முரசொலி செல்வம்:** பத்திரிகையாளர்கள், பத்திரிகை இதெல்லாம் மேல் பூச்சு வார்த்தைகள்தானே! அடிப்படையில் தி.மு.க. எதிர்ப்புணர்வு கொண்ட சில பிராமணர்கள் முன்னின்று அந்நாட்களில் நடத்திய பத்திரிகை அது. இதை மட்டுமா செய்தார்கள்? அவர் என்ன சொன்னாலும் எந்தப் பத்திரிகையிலும் வராத அந்நாட்களில் அவர் மீது அவ்வளவு அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி எழுதுவார்கள். எல்லாவற்றையும் கடந்துதான் வந்தோம்.

**சமஸ்:** பின் வந்த நாட்களில் எதை நெருக்கடியானதாகச் சொல்வீர்கள்?

**முரசொலி செல்வம்:** எதாவது அச்சுறுத்தல், தொல்லைகளை இடையிலேயே ஓடிவிட்டதால், எதைத் தொல்லையென்று சொல்வதென்றே தெரியவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில், எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் எனும் சூழலை அடிக்கடி உருவாக்கிக்கொண்டே இருப்பார்கள். ஜெயலலிதா காலத்தில் உரிமை மீறல் என்று என்னைக் கொண்டு போய் சட்ட மன்றத்தில் கூண்டிலேயே நிறுத்தினார்களே! எல்லாம் பழகிவிட்டது!

**சமஸ்:** தி.மு.க.வைவிமர்சிப்பவர்கள் மீதான ‘முரசொலி’யின் விமர்சனங்கள் பல சமயங்களில் தாக்குதல்களாக அத்துமீறியிருக்கின்றனவே?

**முரசொலி செல்வம்:** ஊரில் ஒரு கதை உண்டு. ஒரு அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே அடிபிடி நடந்து கொண்டிருந்ததாம். அப்பா கேட்டாராம், ‘யாரடா சண்டையை ஆரம்பித்தது?’ அண்ணன் சொன்னானாம், ‘தம்பிதான் பதிலுக்கு அடித்துச் சண்டையை ஆரம்பித்தான் அப்பா’ என்று! நம்மூர் நியாயம் அப்படித்தான். இந்தியாவிலேயே அதிகம் குறிவைத்துத் தாக்கப்பட்ட இயக்கம் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள். நாட்டிலேயே விளிம்புநிலையிலிருந்து வந்தவர்கள் அரசியலதிகாரத்தைக் கையில் எடுத்து, சமூக நீதியைக் கொண்டுவந்த வரலாற்றைக் கொண்ட இயக்கம் இது. அந்தக் காரணத்துக்காகவே தொடர் தாக்குதலுக்கும் உள்ளானது. தாக்குதலுக்குப் பதில் கொடுப்பவர்களைப் பார்த்துதான் இந்தச் சமூகம் எல்லாக் கேள்விகளையும் கேட்கிறது.

**சமஸ்**: போன தலைமுறை தி.மு.க. தொண்டர்களிடம் ‘முரசொலி’க்கு இருந்த செல்வாக்கு இந்தத் தலைமுறையிடம் இருக்கிறதா?




**முரசொலி செல்வம்:** சரிந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பத்திரிகைக் கட்டு அலுவலகத்திலிருந்து கடைக்குப் போகும் முன்பே நூற்றுக்கணக்கானவர்கள் அலுவலக வாசலில் மறித்துப் பத்திரிகையை வாங்கி போய் படித்த காலம் உண்டு. அந்தத் துடிப்பு இன்று எங்கே போயிற்று என்ற கேள்வி ஒடிக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால், தி.மு.க. மட்டுமல்ல; எல்லாக் கட்சிகளிலுமே இளைய தலைமுறையிடம் சித்தாந்தரீதியாக ஒரு வறட்சியைப் பார்க்க முடிகிறது. இதை இந்தக் காலத்தின் பிரச்சினையாகத்தான் அணுக வேண்டியிருக்கிறது. ஆனால், இந்தச் சவாலையும் இயக்கம் கடக்கும்!

# அந்தோ ‘முரசொலி’செல்வம் மறைந்தாரே! வீர வணக்கம்! வீர வணக்கம்!!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல் அறிக்கை!

*சென்னை, அக். 11-*

*முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:-*

*‘முரசொலி செல்வம்’ (வயது 82) என்று அழைக்கப்படும் - மக்களுக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளர் மாரடைப்பால் நேற்று (10.10.2024) பெங்களூருவில் மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து பெருந் துயரத்திற்கு ஆளானோம்.*

*‘முரசொலி’யின் ஆசிரியராகவும், நிர்வாகியாகவும் இருந்தவர். ‘சிலந்தி’, என்ற புனைப் பெயரில் ‘முரசொலி’யில் எழுதி வந்த ஆற்றல் மிகு எழுத்தாளர்! 50 ஆண்டு காலம் ‘முரசொலி’க்குத் தூணாக இருந்தவர்!*

*கருத்துரிமைக்காக தமிழ்நாடு சட்டப் பேரவையில் கூண்டில் நிறுத்தப்பட்டவர் - அப்பொழுதும் கம்பீரமாக நின்ற துணிச்சல்காரர்.*



*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது சகோதரியின் மகனும், மருமகனுமான செல்வம் அவர்கள் ‘முரசொலி’ மாறன் அவர்களின் தம்பியும் ஆவார்.*

*நமது முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அத்தை மகனும், மைத்துனருமாவார்.*

*பெரிய அளவு விளம்பர வெளிச்சத்துக்கு வராமல் அடக்கமாக, ஆக்கப்பூர்வமாக பணிகளை கடமை உணர்வோடு ஆற்றக் கூடியவர்.*

*நம்மிடம் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டவர்.*

*அவரின் எதிர்பாராத மறைவால் பெருந் துயரத்திற்கு ஆளாகி இருக்கும் ‘முரசொலி’ செல்வம் அவர்களின் வாழ்விணையர் திருமதி செல்வி அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களுக்கும், நண்பர்களுக்கும், தி.மு.க. தோழர்களுக்கும் திராவிடர் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*வீர வணக்கம் செலுத்துகிறோம்!*

*இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.*

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தகவல் தொழில்நுட்ப மையம்**

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1 / 2733 / 2024

**குறுகிய மின் ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் முதுநிலை முறை மேலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

Development of Cloud - Based Attendance Management System for NULM Staff and Management of GCC officials Inspection & Fine Details using Cloud Infrastructure for a period one year- க்கான ஒப்பம்.

| பணியின் மதிப்புத் தொகை ரூ.98,95,482/- | ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ.98,955/- |
|---|---|

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **23.10.2024 அன்று பிற்பகல் 3.00 மணி.**

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **24.10.2024 அன்று பிற்பகல் 3.15 மணி**

செ.ம.தொ.இ / 4205 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**முதுநிலை முறை மேலாளர்**



இராமநாதபுரத்தில் 300 க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர் திமுகவில் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். இராமநாதபுரம் மாவட்டம், தி.மு.க. சார்பில் பா.ஜ.க.வினர் தி.மு.க.வில் இணையும் விழா தனியார் மகாலில் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னிலையில் நடைபெற்றது. இதில், இராமநாதபுரம் ஒன்றிய பாஜக தலைவர் சண்முகநாதன்,பொருளாளர் கௌதம்,திருவாடானை ஒன்றிய தலைவர் பிரபு ஆகியோர் பல்வேறு கிராமங்களில் உள்ள கிளைத்தலைவர்கள்,மகளிரணி என 300 க்கும் மேற்பட்டவர்கள் தங்களை பா.ஜ.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர். இந்த நிகழ்ச்சியில், மாவட்ட துணைச்செயலாளர் கே.கே.கருப்பையா, இராமநாதபுரம் ஒன்றிய செயலாளர் பிரபாகரன்,நகர் மன்ற தலைவர் ஆர்,கே.கார்மேகம், துணைத்தலைவர் பிரவீன்தங்கம், மண்டபம் ஒன்றிய செயலாளர் கே.ஜே.பிரவீன், மாநில விவசாய அணி துணை அமைப்பாளர் குணசேகரன்,செயற்குழு உறுப்பினர் மிசா, அகமதுதம்பி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.